வவுனியா மாநகர சபை

உள்ளூராட்சி அதிகார சபைகளில் காணப்படும் சாரதி பதவிக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல் - 2026

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2025.04.04 ஆம் திகதி முதல் அனுமதிக்கப்பட்ட வவுனியா மாநகர சபைக்கான ஆளணி விபரங்களுக்கமைவாகவும், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் **NP/14/1/ET/Uns/Gen/2026** ஆம் இலக்க **2026.10.05** ஆம் திகதிய கடிதம் மூலம் அறியத்தரப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் DMS/CAD/NP/Gen./Vac.Fill. இலக்க 2026.09.24 ஆம் திகதிய அனுமதிக்கமைவாகவும், வவுனியா மாநகர சபையில் சாரதி பதவியில் காணப்படும் கீழ்க்குறிப்பிடப்படும் வெற்றிடங்களை, 2013.01.01 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2013.07.30 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான சாரதி சேவைக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதன் திருத்தங்களுக்கமைவாக நிரப்புவதற்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொடர் இல	பதவிப் பெயர்	தரம்	நிரப்புவதற்காக அனுமதி வழங்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை
01	சாரதி	தரம் III	08

01. சம்பள அளவுத்திட்டம் :

25.03.2025 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை **இல.10/2025** இன் அட்டவணை I இற்கமைய சம்பளத் தொகுதி **PL 3 - 2025** இற்கு உரித்தான இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 42,780 - 10 × 490 - 10 × 540 - 10 × 590 - 12 × 630 - 66,540/- ஆகும்.

02. ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமைகள் :

- விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
- ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்களுக்கு உச்ச வயது எல்லை ஏற்புடையதாகாது.
- நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி வவுனியா மாநகர சபை எல்லைக்குள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான நிரந்தர வதிவிடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். வவுனியா மாநகராட்சி அதிகார எல்லைக்குள் அத்தகைய விண்ணப்பதாரர்களின் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் வவுனியா மாவட்டத்தினுள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான வதிவிடத்தைக் கொண்டிருப்பவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். **(நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கு கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்ட வதிவிட குணநலச் சான்றிதழ் அல்லது வாக்காளர் பிரித்தெடுப்பு அவசியமாகும்)**

03. சேவை நிபந்தனைகள் :

- இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமானது.
- ஊழியர் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வரத்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளவாறு, தாபனவிதிக்கோவை (Establishment Code) மற்றும் நியமனங்கள் தொடர்பான பொதுவான நிபந்தனைகள் பொருந்தும்.
- ஊழியர், மாகாண நிதி ஒழுங்குவிதிகள், தாபனவிதிக்கோவை, திணைக்கள விதிகள், தாபன நடைமுறை ஒழுங்குவிதிக்கோவை மற்றும் அரசாங்கம், வடமாகாண சபை, கௌரவ ஆளுநர், பிரதம செயலாளர் ஆகியோரால் அவ்வப்போது வெளியிடப்படும் பிற விதிகள் அல்லது ஒழுங்குமுறைகளுக்கு கட்டுப்பட்டவராவார்.
- நியமனம் பெறுபவர்கள் மூன்று **(03)** வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள். ஏற்கனவே நிரந்தர சேவையில் உள்ளவராக இருந்தால் ஒரு **(01)** வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் **(Trial)** அமர்த்தப்படுவார்.
- திணைக்களத் தலைவர் உத்தரவிட்டால், அதற்குரிய பிணையை (Security) வழங்குவதற்கு அலுவலர் கடமைப்பட்டுள்ளார்.
- தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரின் பணி, நடத்தை மற்றும் வருகை திருப்திகரமாக இருந்தால், அத்தகுதிகாண் காலத்தின் இறுதியில் அவர் தனது பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்.
- குறித்த நியமனம் இடமாற்றத்திற்கு உட்படாததுடன் நியமனம் பெறுபவர்கள் வவுனியா மாநகர சபையிலேயே கடமையாற்றும் பொறுப்புடையவர்கள்.

04. கல்வி, தொழில்சார் தகைமைகள்

கல்வித்தகைமைகள்

- கா.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியுடன் அறு **(06)** பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஒரே அமர்வில் ஆகக்குறைந்தது ஐந்து **(05)** பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமானதாகும்.

மற்றும்

❖ பதவிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளின் தன்மைக்கு ஏற்ப, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை (N.V.Q) மட்டம் 04 இற்குக் குறையாத/ இணையான தொழிற்பயிற்சிச் சான்றிதழ்/ தகைமைச் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு : மேற்குறிப்பிட்ட கல்வித்தகைமைகளிற்கான உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சைப்பெறுபேறுகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

தொழில்சார் தகைமைகள்

❖ திண்மக்கழிவகற்றல், திரவக்கழிவகற்றல், குடிநீர் வழங்கல் ஆகிய சேவைகளுக்குரிய வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் செலுத்தக் கூடிய தகைமையைக் கொண்டிருத்தல்.
(Ex: Pick up, Van, Bus, Tractor, Gully Bowser, Roller, Moter Grader, Lorry Bowser, Backhoe Loader, Compactor, Three -Wheeler, etc.)

❖ மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் அவர்களால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் பெற்ற திகதியிலிருந்து குறைந்தது 03 வருட அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் இலகுரக, கனரக மற்றும் நிலவாகன (உழவு இயந்திரம்) வகுப்பு வகைகளைச் செலுத்துவதற்கான தகைமையுடைய சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

05. தெரிவு செய்யப்படும் முறை :

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக்குழுவினால் குறித்த பதவிக்கான சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படுவதுடன் அதில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் தரவரிசையொழுங்கில் **(Rank)** தெரிவு செய்யப்படுபவர்களிற்கு உள்ளூராட்சி மன்றங்களில் பயன்படுத்தப்படும் வாகனங்களை செலுத்தும் திறனை பரிசீலிக்கும் தொழிற்பரீட்சையொன்று **(Trade Test)** நடாத்தப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்	அதிகபட்ச புள்ளிகள்	தெரிவு செய்யப்படுவதற்கு பெற்றுக்கொள்ளக்கூடிய குறைந்தபட்ச புள்ளிகள்
கல்வித்தகைமை	50	20
வேலை தொடர்பான அறிவு	25	10
நடத்தை மற்றும் ஒழுக்கம்	25	10
மொத்தம்	**100**	**40**

தொழிற்பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் தரவரிசையொழுங்கில் **(Rank)** தெரிவு செய்யப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

06. விண்ணப்ப முடிவுத் திகதி : 2026.11.15

07. விண்ணப்பிக்கும் முறை :

1. அலுவலக நாட்களில் வவுனியா மாநகர சபை அலுவலகத்தின் வருமானக் கிளையில் ரூபா.602.50 **(VAT வரி, SSCL வரி உள்ளடங்கலாக)** செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை தாபனக்கிளையில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப்படிவமானது பூரணப்படுத்தப்பட்டு, கல்வித்தகைமை மற்றும் ஏனைய தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் தபாலுறையிலிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் தேவையான சரியான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியினால் தெளிவாகப் பூரணப்படுத்தப்பட்டு கையொப்பமிடப்படல் வேண்டும்.
4. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ, நேர்முகப் பரீட்சையின் போதோ அல்லது நேர்முகப் பரீட்சையின் பின்னரோ விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவந்து ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவர் என இனங்காணப்படும் எச்சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்/ இரத்துச்செய்யப்படும்.
5. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப முடிவுத்திகதியான 2026.11.15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக **"மாநகர ஆணையாளர், மாநகர சபை, வவுனியா"** என்ற முகவரிக்கு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் **(சாரதி - தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பம்)** குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
6. மேற்படி பதவிக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அனைத்து அதிகாரமும் வவுனியா மாநகர சபையின் ஆணையாளருக்கு உண்டு.

சி.சிவரஞ்சினி,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
வவுனியா.

திகதி : 2026.10.27